
# திராவிடத்தால் வாழ்கிறோம்

947

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

136



# ‘முதல்வரின் காக்கும் கரங்கள்!’

## முன்னாள் படைவீரர் நலனில் அரசின் உறுதி!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

இந்தியாவில் தனித்த அரசியல் - பண்பாட்டு அடையாளங்களுடன் தமிழ்நாடு விளங்கினாலும், நாட்டுப்பற்று, நாட்டின் பாதுகாப்பு சார்ந்தவற்றில் என்றுமே விலகி நின்றதில்லை. நாட்டுநலன், பாதுகாப்பு ஆகியவற்றில் ஒன்றிய அரசுடன் ஒத்துழைப்பதில் முன்னிலை மாநிலம் தமிழ்நாடு. குறிப்பாக, தி.மு.கழகம்.

1962-ஆம் ஆண்டில் இந்திய - சீனப்போரின் போது, அன்றைய பிரதமர் நேருவின் கோரிக்கைக்கு ஏற்ப, நேருவின் கரத்தை வலுப்படுத்தும் வகையில், ஆதரவு அளித்ததுடன், பெரும் நிதி உதவி திரட்டியும் அளித்தார், திராவிட மாடலின் ஆணிவேர் பேரறிஞர் அண்ணா.

1971-ஆம் ஆண்டு வங்கதேசப் பிரிவினைப் போராட்டத்தின்போது, வங்கதேசம் பிரிந்து செல்ல இந்தியா ஆதரவு அளித்தது. அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் கரத்தை வலுப்படுத்தும் வகையில், இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்த கட்சி தி.மு.க., ஆட்சி, கலைஞரின் ஆட்சி. வங்க தேசத்தின் மீதான இந்தியாவின் ராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து, தமிழ்நாடெங்கும் கூட்டங்களை நடத்தியிருக்கிறது கழக ஆட்சி.

அந்த வரிசையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் வழியிலான திராவிட மாடல் அரசு, படைவீரர்களின் நலனில் கொண்ட அக்கறை, **‘முதல்வரின் காக்கும் கரங்கள்’** என்னும் திட்டமாக வெளிப்பட்டுள்ளது.

### அரசின் பாதுகாப்பு

2024-ஆம் ஆண்டு, சுதந்திர நாள் அன்று, சென்னை கோட்டையில் கொடியேற்றிவைத்துப் பேசிய நம் முதலமைச்சர் அவர்கள், புதிய சில திட்டங்களுடன், முன்னாள் படைவீரர் நலனுக்கென ‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்று அறிவித்தார். நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை ராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவடைந்து ஓய்வுபெற்ற முன்னாள் படை வீரர்களின் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அந்தத் திட்டத்தில் வழிவகை செய்யப்படும் என்று அறிவித்தார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, மறு வேலைவாய்ப்பு அளித்தல், முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு, படைப் பணியில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு என பல்வேறு திட்டங்களை, அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில்தான் **‘முதல்வரின் காக்கும் கரங்கள்’** என்கிற திட்டம் தொடங்கப்படும் என கடந்த ஆண்டில், முதலமைச்சர் அறிவித்தார்.

- விண்ணப்பதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- முன்னாள் படை வீரர்களின் அதிகபட்ச வயது 55. திருமணமாகாத மகள், மகன் மற்றும் கணவனை இழந்த மகளின் குறைந்த பட்ச வயது 25. முன்னாள் படை வீரர்களின் கைம் பெண்களின் குறைந்தபட்ச வயது 21, அதிகபட்ச வயது 55.



அதன்படி, திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 19.08.2025 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **‘முதல்வரின் காக்கும் கரங்கள்’** திட்டத்தைத் தொடங்கிவைத்து, 155 முன்னாள் படை வீரர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான ஆணைகளையும் அளித்தார் முதலமைச்சர். முதற்கட்டமாக இந்த 155 பயனாளிகளுக்கும் திட்டச் செலவினமான ரூ.24.43 கோடி 30 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும்.

### ஒரு கோடி ரூபாய் வரை

இந்தத் திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் சுயதொழிலில் ஈடுபடவும் மற்றும் சிறந்த தொழில் முனைவோர்களாக மாறிடவும் தேவையான நிதி மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும். முதற்கட்டமாக 400 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயனடைய உள்ளனர். இந்தத் திட்டத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை வங்கிக் கடனுதவி மானியத்துடன் ஏற்பாடு செய்யப்படும்.

தொழில்களுக்கு வழங்கப்படும் கடன்தொகையில் 30 சதவிகிதம் மானியமாகும். கூடுதலாக 3 சதவிகிதம் வட்டி மானியமும் வழங்கப்படும். பயனாளிகளுக்குத் தொழில் தொடங்குவதற்கான மூலதனத்துக்கு மானியமும், செலுத்த வேண்டிய வட்டிக்கான மானியமும் அளிக்கப்படுவதால், கடன்சுமை குறையும்.

> **‘முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்’ பாதுகாப்புத் துறையில் பணியாற்றியோருக்கு பக்கபலமாக இருக்கிறது.**

### விண்ணப்பிக்கும் முறை

முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. www.exwel.tn.gov.in தளத்தின் வழி விண்ணப்பிக்கலாம் அல்லது அந்தந்த மாவட்டத்தில் உள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகி விண்ணப்பிக்கலாம்.

பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான தேர்வுப் பணிக்குழு (District level Task Force Committee) அமைக்கப் பட்டுள்ளது.

இந்தக் குழுவினர், விண்ணப்பங்களைத் தேர்வு செய்து, சம்பந்தப்பட்ட வங்கிக்கு தொழில் தொடங்குவதற்கான கடன் ஒப்புதல் பெற அனுப்பி வைப்பர். வங்கிகள் அவற்றை ஆய்வுசெய்து தற்காலிக ஒப்புதல் (Provisional Sanction) ஆணை வழங்கும்.

### தொழில் முனைவோர் பயிற்சி

தொழில் தொடங்குவதற்கான வங்கியின் தற்காலிக ஒப்புதல் பெற்றவர்களுக்கு (Provisional Sanction) அரசு செலவில் சென்னை- தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இறுதியாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் கடனுதவி, சம்பந்தப்பட்ட வங்கிகளால் கடன் இறுதி ஒப்பந்தம் (Final Sanction of Loan) அளிக்கப்படும்.

‘முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்’ பாதுகாப்புத் துறையில் பணியாற்றியோருக்கு பக்கபலமாக இருக்கிறது. முன்னாள் படை-வீரர்களின் தியாகத்தையும் சேவையையும் அங்கீகரிக்கிறது. அவர்களுக்கு நிரந்தரமான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது. அவர்களை மதிப்புமிக்க வாழ்க்கைக்கு முன்னேற்றுவதில், திராவிட மாடல் அரசு கொண்டுள்ள உறுதிக்குச் சான்றாகிறது.

**...சாதனை தொடரும்**

## ‘உணவு’ அவரவர் உரிமை!

கேரள மாநிலம், கொச்சியில் உள்ள கனரா வங்கி வளாக கேன்டீனில் மாட்டிறைச்சி உணவுகள் சாப்பிடவோ, சமைத்து விற்கவோ கூடாது என்று புதிதாகப் பொறுப்பேற்ற மேலாளர் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார். இந்தியாவிலேயே மாட்டிறைச்சி உணவை அதிகம் உட்கொள்ளும் மாநிலம் கேரளம். ஒப்பீட்டளவில், தமிழ்நாட்டை விட மிகச்சிறிய மாநிலமான கேரளாவில், தமிழ்நாட்டை விட ஆண்டொன்றுக்கு 3 மடங்கு அதிகமாக மாட்டிறைச்சி உட்கொள்ளப்படுகிறது. ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் தரவுகளே இதை உறுதிப்படுத்துகின்றன.

அத்தகைய மாநிலத்திற்கு வங்கி ஊழியராகச் சென்ற, பீகாரைச் சேர்ந்த நபர், வடமாநிலங்களைப் போல கருதிக்கொண்டு, தனது கட்டுப்பாட்டில் உள்ள வங்கிக் கிளையின் கேன்டீனில் மாட்டிறைச்சி உண்ணக்கூடாது என்று விதித்த கட்டுப்பாடு, அம்மாநில வங்கிப் பணியாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அந்த மேலாளருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும், தங்கள் உணவு உரிமையை வெளிப்படுத்தும் விதமாகவும் வங்கிப் பணியாளர்கள் கூட்டமைப்பின் சார்பில், மாட்டிறைச்சி உணவுத் திருவிழா நடத்தியுள்ளனர். “என்ன உண்ண வேண்டும்? என்ன உடுத்த வேண்டும்? என்பதை முடிவு செய்யும் அதிகாரம் உயரதிகாரிகளுக்கு இல்லை. அது எங்களின் உரிமை” என்று அவர்கள் வெளிப்படுத்திய எதிர்ப்பு, நாடெங்கும் கவனம் ஈர்த்துள்ளது.

உணவு உரிமைக்கு எதிராக, பா.ஜ.க. மற்றும் இந்துத்துவ அமைப்புகள் வெளிப்படுத்தும் கருத்துகள், நடவடிக்கைகளின் விளைவுதான் வங்கி மேலாளரின் இந்தப் புரிதலற்ற நடவடிக்கைக்குக் காரணம் என்றும், சமூக வலைதளங்களில் விவாதிக்கப்படுகிறது. நாடெங்கும் மாட்டிறைச்சிக்கு எதிராகப் பேசும் பா.ஜ.க.வோ அல்லது இந்துத்துவப் பரிவாரங்களோ அவர்கள் ஆளும் கோவாவில், மாட்டிறைச்சி தடை குறித்து, ஏன் வாய் திறப்பதில்லை என்று சிந்தித்தாலே, அதனுள் இருக்கும் அரசியல் புரியும்!

## ப்ளாஷ்பேக்





### கலைஞருடன் கழக முன்னோடிகள் நடத்தி வைத்த மணவிழா!

எனது மாமா மறைந்த திரு.கோ.உதய குமார் அவர்கள், தஞ்சை மாவட்டக் கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர். வட்டச் செயலாளராக இருந்தார். இந்தப் படம், 1989-ஆம் ஆண்டு, ஜூன் 28-ஆம் தேதி அவரது மண விழாவை, தலைவர் கலைஞர் தலைமையேற்று நடத்தி, தாலி எடுத்துக் கொடுக்கும் காட்சி. தலைவர் அவர்கள் 1989-இல் முதலமைச்சரான பின்னர் நடத்தி வைத்த முதல் திருமணம் என்பார்கள். அன்பிலார், மன்னையார், கோ.சி.மணி, செ.குப்புசாமி, இரா.வெற்றிகொண்டான், அண்ணன் திருச்சி.சிவா, எல்.ஜி. என கழக முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு வாழ்த்தியுள்ளனர்.



ஆர்.ராணிகண்ணன்

**– ஆர்.ராணிகண்ணன், மாவட்ட அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி, தஞ்சை மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நாடகத் தடைச் சட்டம்!

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரி 20-ஆம் தேதி, தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம், கோவையை அடுத்த பேரூரில் நடைபெற்றது. அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ‘சோஷலிச மாதிரிப் பொருளாதார அமைப்பு’ வெறும் கண்துடைப்பு என்றும், தொழில் துறையில் மிகவும் பின்தங்கியுள்ள தென்னாட்டை, இந்திய அரசு உதாசீனப்படுத்துவதைக் கண்டிக்க, மார்ச் 20-ஆம் தேதி, ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்’ அனுசரிக்க வேண்டும் என்றும், சென்னை அரசு நிறைவேற்றியுள்ள நாடகத் தடைச் சட்டத்தைக் கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.